பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
11 07 2025 **FRIDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு, சட்ட நிபுணர்களுடன் இன்று ஆலோசனை நடத்தியுள்ளது.

2. யமுனை ஆற்றை புனரமைப்பது குறித்த உயர்நிலைக் குழுக் கூட்டம் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

3. தமிழ் உள்ளிட்ட மூன்று மொழிகளில் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம் தயாரித்துள்ள திருக்குறள் நாட்காட்டியை மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி இன்று வெளியிட்டார்.

4. சத்திஷ்கரில் 22 மாவோயிஸ்ட்டுகள் மாநில காவல்துறையினரிடம் இன்று சரணடைந்தனர்.

5. உலக நீச்சல் சாம்பியன் போட்டி சிங்கப்பூரில் இன்று தொடங்கியது.

<<<<<<<>>>>>>>>

ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டம், புதுதில்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்றது.

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. **P.P. Chaudhary** தலைமையில், 39 உறுப்பினர்களைக் கொண்ட இந்த குழுவில் மக்களவையின் 27 பேரும், மாநிலங்களவையின் 12 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நாடாளுமன்ற தேர்தலுடன் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், ஒரே நேரத்தில் சட்டப்பேரவை தேர்தல்களையும் நடத்தும் சட்டத்திருத்தம் குறிதது இந்த குழுவினர் விரிவாக ஆலோசனை மேற்கொண்டனர்.

இந்த கூட்டத்தில் பங்கேற்ற உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதிகள் திரு. **J.S. Khehar,** திரு. **D.Y. Chandra Chud** ஆகியோர் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதால் ஏற்படும் சாதகங்கள் குறித்து விளக்கமளித்தனர்.

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அனுராக் தாக்கூர், காங்கிரஸ் கட்சியின் திருமதி. பிரியங்கா காந்தி, சமாஜ்வாதி கட்சியின் திரு. **Dharmendra Yadav** ஆகியோர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

<<<<<<<>>>>>>>>

யமுனை ஆற்றை புனரமைப்பது குறித்து உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் உயர்நிலைக் குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

மத்திய அமைச்சர்கள் திரு. மனோகர்லால், திரு. சி.ஆர். பாட்டீல், தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா, உள்துறை செயலாளர் திரு. கோவிந்த் மோகன் உள்ளிட்டோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யமுனை ஆற்றை தூய்மைப்படுத்தி தண்ணீரை முன்பிருந்த நிலைக்கு கொண்டு வருவது குறித்த திட்டங்கள் மற்றும் அதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளில் கவனம் செலுத்துவது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

தமிழ் உள்ளிட்ட மூன்று மொழிகளில் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம் தயாரித்துள்ள திருக்குறள் நாட்காட்டியை மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி இன்று வெளியிட்டார்.

ஐதராபாதில் இன்று மத்திய உள்துறை அமைச்சகத்தின் அலுவல் மொழித்துறையின் பொன்விழா கொண்டாட்டங்களில் திரு. கிஷன் ரெட்டியுடன், மாநிலங்களவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ், ஆந்திரப்பிரதேச துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாண் ஆகியோர் இணைந்து இந்த நாட்காட்டியை வெளியிட்டனர்.

தமிழ் தவிர, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திருக்குறளும் அதன் தெளிவுரையும் இந்த நாட்காட்டியில் அச்சிடப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய திரு. கிஷன் ரெட்டி, நாட்டின் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் பாதுகாப்பதில், மொழி முக்கியப் பங்காற்றுவதாக தெரிவித்தார்.

இந்தியாவின் பன்முகத் தன்மையை பாதுகாப்பதில் ஹிந்தி மொழி சிறந்த பங்களிப்பை வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

சீனா, ஜப்பான், இஸ்ரேல் போன்ற நாடுகள் தங்களின் தேசிய மொழிக்கு முன்னுரிமை அளித்து வருவதாகவும் திரு. கிஷன் ரெட்டி கூறினார்.

<<<<<<<>>>>>>>

மாற்றுத் திறனாளிகள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மூத்த குடிமக்களுக்கு செயற்கை மூட்டு வழங்கும் **Rashtriya Vayoshri** என்னும் திட்டம், மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நாளை வரை செயற்கை மூட்டு வழங்குவதற்கான முகாம்கள் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - அனுராதா 48 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>>

சத்திஷ்கரில் 22 மாவோயிஸ்ட்டுகள் மாநில காவல்துறையினரிடம் இன்று சரணடைந்தனர்.

நாராயன்பூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ராபின்சன் குரியா முன்னிலையில் அவர்கள் சரணடைந்தனர்.

இவர்களுக்கு 37 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.

சத்திஷ்கர் மாநில அரசின் புதிய மறுவாழ்வுக் கொள்கையின் அடிப்படையில் சரணடையும் மாவோயிஸ்ட்டுகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் ஊக்கத்தொகையும், இதர வாழ்வாதார வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்ற அடிப்படையில் இந்த பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>>

பீகார் மாநிலத்தில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் ஆயிரத்து 100 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் இதுவரை 400 ரூபாய் வழங்கப்பட்டு வந்த நிலையில், இன்று முதல் ஆதரவற்ற முதியோர், விதவைகள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோருக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியத் தொகை வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில், முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் தலைமையில் நடைபெற்ற அம்மாநில அமைச்சரவை கூட்டத்தில் ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க முடிவு எடுக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>>>

பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் ஏழு இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் இன்று சோதனை நடத்தி வருகின்றனர்.

கடந்த பிப்ரவரி மாதத்தில் அமெரிக்காவிலிருந்து சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் ஊடுருவியவர்கள் தொடர்பான வழக்கின் அடிப்படையில், இந்த சோதனை நடைபெற்றதாக அமலாக்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>>>

ஜம்மு கஷ்மீரில் தீவிரவாதத்திற்கு நிதியுதவி வழங்கியது தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக மூன்று இடங்களில் யூனியன் பிரதேச விசாரணை அமைப்பு சோதனை நடத்தியது.

ஜம்மு, தோடா, ஹந்துவாரா ஆகிய இடங்களில் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் கிரிப்டோ கரன்ஸி மூலமாக எல்லை தாண்டி நிதியுதவி அளிக்கப்படுவதாக கிடைத்த தகவலின் பேரில் அதிகாரிகள் சோதனை நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இளைஞர்களை குறிவைத்து, நிதியுதவி அளித்து அவர்களை தீவிரவாத செயல்களில் ஈடுபட தூண்டுவதாக வந்த தகவலின் பேரில், இந்த சோதனை நடத்தப்பட்டதாக அதிகாரிகளை மேற்கோள் காட்டி, செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<<<>>>>>>>>

ராணுவச் சட்டத்தை அமல்படுத்தியதாக கைது செய்யப்பட்டுள்ள தென்கொரிய முன்னாள் அதிபர் திரு. **Yoon Suk Yeol** விசாரணைக்காக இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

அவர் சிறப்பு விசாரணை அதிகாரி முன்னிலையில், விரைவில் ஆஜர்படுத்தப்படுவார் என்று அந்நாட்டு அரசு வழக்கறிஞர் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் ராணுவ சட்டத்தை அமல்படுத்திய போது, குறிப்பிட்ட சில அமைச்சர்களை மட்டுமே அழைத்து உரிமை மீறலில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

நீதிமன்றம் அளித்த கைது உத்தரவை தொடர்ந்து, அவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

<<<<<<<>>>>>>>>

உலக நீச்சல் சாம்பியன் போட்டி சிங்கப்பூரில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் Aryan Nehra, Sajan Prakash உள்ளிட்ட 16 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<<>>>>>>>>

துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 6-4 6-4 என்ற செட்கணக்கில் துனிஷியாவின் **Alla Trifi** ஐ வென்றார்.

<<<<<<<>>>>>>>>

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sarika தங்கப்பதக்கம் வென்றார்.

கிர்கிஸ்தானின் **Bishkek** -ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 20 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியாவின் ரீனா, நேகா ஷர்மா, அஞ்சலி, முஸ்கன், ஹர்ஷிதா மற்றும் காஜல் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<<<>>>>>>>

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் பங்கேற்க இந்தியாவின் **Navdeep Singh** தகுதி பெற்றுள்ளார்.

பெங்களுருவில் நடைபெற்று வரும் இந்தியன் ஓபன் பாரா தடகள சாம்பியன் போட்டியில் ஈட்டி எறிதல் பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்று அவர் உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றார்.

<<<<<<<>>>>>>>

ரொமேனியா சர்வதேச சாலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் கதே – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

இந்தியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 387 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

லண்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் பும்ரா அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து, முதல் இன்னிங்ஸை தொடங்கி விளையாடி வரும் இந்தியா சற்றுமுன் வரை ஒரு விக்கெட் இழப்புக்கு 13 ரன் எடுத்துள்ளது.

<<<<<<<>>>>>>>